# இந்திய வம்சாவழியினரை ஏற்கும் விடயத்தில் ராஜீவ் காந்தியின் நிபந்தனையில் மாற்றமில்லை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 8-1-86 புதன் (மார்கழி 24 ரபீவு ஆகிர் 26) முழக்கம் 334

(சென்னை)

இந்தியா வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் இலங்கைக்குத் திரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்பட்ட பின்னரே, ஒரு லட்சம் இந்திய வம்சாவழியினரை பாரதம் ஏற்றுக்கொள்ள முடியுமென்ற தமது முன்னைய முடிவை பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று மீண்டும் உறுதிப்படுத்தி ஊர்ஜிதம் செய்தார். தமிழக விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி திரும்பும் வழியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்ன பிரதமர், இரு பகுதியினரையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த பாரதம் முயற்சித்து வருவதாகவும் சொன்னார். இலங்கையில் மாமூல் நிலைமை திரும்பவும் ஏற்படவே இந்தியா விரும்புவதாகவும் குறிப்பிட்ட பிரதமர் ராஜீவ், அகதிகள் விவகாரம், இந்திய வம்சாவழியினர் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் தொண்டமானுடன் தாம் விரிவான பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் சொன்னார்.

# யாழ். சம்பவ தனி அறிக்கையை சிவத்தம்பி நாளை சமர்ப்பிப்பார்

## அதன் பின்னரே ராஜினமாக் கடிதம் கையளிப்பு

### கண்காணிப்புக் குழுவும் சம்பவங்கள்பற்றி அறிக்கையைச் சமர்ப்பிக்குமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்கள் பற்றிய தனியான அறிக்கையொன்றை கண்காணிப்புக் குழு உறுப்பினரான பேராசிரியர் கா. சிவத்தம்பி நாளை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர் தமது பதவியிலிருந்து விலகும் கடிதத்தையும் கையளிப்பார் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

4ம் திகதி நடைபெற்ற ஹெலிகப்டர் தாக்குதல்களைத் தாம் நேரில் கண்டதாக பேராசிரியர் சிவத்தம்பி, தெரிவித்த தகவல் 5ம் திகதிய 'ஈழமுரசு' வில் வெளியானது தெரிந்ததே.

5ம் திகதி பிற்பகல் யாழ். நகரில் இடம்பெற்ற தாக்குதல்களையும் தாம் நேரில் காண நேர்ந்ததாக இவர் பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

கண்காணிப்புக் குழுவின் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறும் போது, 4-ம 5-ம் திகதிய சம்பவங்கள் பற்றி குழு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும். இக் கூட்டத்

—6ஆம் பக்கம் பார்க்க

### சென்னை முதல் டில்லி வரை
### தொண்டமானும் ராஜீவும் விமானத்திலேயே பேசினர்

(சென்னை)

அமைச்சர் எஸ். தொண்டமானும், பிரதமர் ராஜீவ் காந்தியும் சென்னையிலிருந்து நேற்று புதுடில்லி வரை தனி விமானத்தில் பயணம் செய்யும்போது இலங்கை மலையக மக்கள் பிரச்சினை பற்றி கலந்துரையாடினர்.

இன்று புதுடில்லியிலும் இவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்துவர். டில்லியில் பாரத வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியையும், வெளியுறவு அமைச்சுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியையும் அமைச்சர்சந்தித்துப் பேசுவார்.

நான்கு லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து பிரதமரிடம் கவலை

—6-ஆம் பக்கம் பார்க்க

### வழக்கறிஞர் சொன்னார்
### இந்திராவை கொலை செய்தவர் ராஜீவ்தான்!

இந்திரா காந்தியை அவரது மகனை ராஜீவ் காந்தியே சுட்

...6ம் பக்கம் பார்க்க

### ஜனதிபதி அறிவிப்பு
### கூட்டணியின்யோசனைகள் பரிசிலித்து தீர்வு காணப்படும்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினை பற்றிய தீர்வுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்ப்பித்த மாற்றுத் திட்டம் பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் இது பற்றிப் பேசி முடிவு காணப்படும் எனவும் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று நடைபெற்ற அரசாங்க பாராளுமன்ற குழு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இந்தப் பிரச்சினை பற்றிய முடிவு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படும் என்று சொன்ன ஜனதிபதி அதற்கு முதல் தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை கீழே போடுவதுடன் தமது முகாம்களையும் கலைக்க வேண்டும் என்றும் சொன்னார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

—6-ஆம் பக்கம் பார்க்க

### யாழ். ரயில் நிலையத்திலேயே ரயில் டிக்கட்டுகள் விற்பனை

யாழ். ரயில் நிலையத்திலிருந்து பயணஞ் செய்பவர்களுக்கான டிக்கட்டுகளை தொடர்ந்தும் துரையப்பா ஸ்ரேடியத்தில் வைத்து வழங்குவதற்கு பொதுமக்களுக்குப் பாதுகாப்பில்லாத காரணத்தால் மேற்படி டிக்கட்டுகள் மறு அறிவித்தல் வரை யாழ். ரயில் நிலையத்தில் வைத்தே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு காசுக்கு டிக்கட்டுகள் வழங்கப்பட மாட்டாது எனவும், காசுக்கட்டளைக்கும்,

—6ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா நேற்று வெறிச்சோடிக் கிடந்தது; ஓமந்தையில் ஒரு தேநீர்க்கடை தீக்கிரை!

(வவுனியா)

வவுனியாவில் நேற்று கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இ. போ. ச பஸ்கள் மாத்திரம் முற்பகல்வரை நகரில் சேவையில் ஈடுபட்டிருந்தன. குறுகிய சேவையிலீடுபடும் தனியார் வான்கள் அச்சம் காரணமாக வீதிக்கு வராமல் ஒதுங்கிக் கொண்டன.

மதவாச்சி, அனுராதபுரம், மன்னார், யாழ்ப்பாணத்துக்கான இ. போ. ச. பஸ் சேவைகள் நடைபெற்றன.

முற்பகல் பதினொருமணியளவில் யாழ். வீதியில் இராணுவம் ரோந்து சென்றது.

ஓமந்தையில் பறநாட்டுக்கல் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த கண்ணிவெடிச் சம்பவத்தின் எதிரொலி வவு

...6ம் பக்கம் பார்க்க

### மலையகத்தில் மண் சரிவு; இருபத்தொரு பேர் மரணம்

கடந்த சில நாட்களாக நாட்டில் பெய்துவரும் கடும் மழையைத் தொடர்ந்து மலையகத்தில் மூன்று இடங்களில் மண் சரிவினல் சிறுவர்கள் உட்பட இருபத்தொரு பேர் மரணமானார்கள். இச்சம்பவங்கள் நுவரெலியா, பதுளைபகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

ஹிங்குராகொடவில் மூன்று வீடுகள் முற்ருகப் புதையுண்ட

—6-ஆம் பக்கம் பார்க்க

### மன்னம்பிட்டி 7அடி வெள்ளம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை

—6-ம் பக்கம் பார்க்க

### தமிழ் படிக்கும் ராணுவத்தினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் ரோந்து சென்ற இராணுவத்தினரில்

...6ம் பக்கம் பார்க்க

### மினி வானைக் கடத்தியதால் சண்டிலிப்பாயில் மறியல்

தனியார் மினிவான் ஒன்று கடத்தப்பட்டதால் நேற்று சண்டிலிப்பாய் சந்தியில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்த வானின் உரிமையாளரும், அவரது குடும்பத்தினரும் நேற்று அதிகாலை முதல் சுலோகங்களை தாங்கிய வண்ணம் வீதிகளை தடைபோட்டு இந்த மறியல் போராட்டத்தை நடாத்தினர். இதனல்

...6ஆம் பக்கம் பார்க்க

தமிழ் பேசும் மக்களின் அபிமானம் பெற்றது ஈழமுரசு

**விளம்பரம்**

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 126, கே. கே. எஸ். வீதி, "றூபி" அடைவு பிடிப்பவரிடம் 15-3-1981 தொடக்கம் 31-12-1984 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 1-2-1986 காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவுகடையில் வைத்து ஏன்ணை விற்கப்படும். கே. இராஜகோபால் ஏல விற்பனையாளர், வண்ணார்பண்ணை.

R 15281

## மூளாய் சமாதான சபை

(சுழிபுரம்)

மூளாய்ப் பகுதி மக்களிடையே ஏற்படும் பிணக்குகள், சச்சரவுகளைத் தீர்ப்பதற்காகப் புதிய சமாதானசபையொன்று அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டுள்ளது.

தலைவர்: இ. த. விக்கினராசா (சட்டத்தரணி), செயலர்: நா. குமரகுருநாதன், உபதலைவர்: ப. சிவப்பிரகாசம், உபசெயலர்: கோ. சிங்கராசா, பொருளாளர்: க. இராமநாதன் பதினறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

மாதகல் மேற்கு உதயதாரகை சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ செல்லத்துரை, உபதலைவர்: ச. மரியதாஸ், செயலாளர்: வ. இரத்தினதுரை, உபசெயலாளர்: ஐ. தர்மலிங்கம், பொருளாளர்: சூ. மரியநாயகம். ஐவர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பிறந்தநாள் வாழ்த்து

✻ திருநெல்வேலி கிழக்கு புஷ்பராசலிங்கம் கமலாதேவி தம்பதியின் இரட்டையர்கள் கம்ஷா, கௌஷியா இன்று தமது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள்.

✻ முள்ளியவளை நற்குணசிங்கம் லதா தம்பதியின் மகன் சதீஸ் இன்று தனதுநான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ பருத்தித்துறை வியாபாரி மூலை சிவப்பிரகாசம் புஷ்பவதி தம்பதியின் மகன் நித்தியபிரகாஷ் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ கல்வியங்காடு குலசிங்கம் நகுலேஸ்வரி தம்பதியின் மகன் சுஜீவன் இன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ ஒட்டகப்புலம் சாமிநாதன் றேசலின் தம்பதியின் மகன் சந்திரதாஸ் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நல்லூர் செல்வராஜா ரோகினி தம்பதியின் மகள் தர்சிகா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ யாழ். சென். பற்றிக்ஸ் வீதி யேசுராஜா வனிதா தம்பதியின் மகன் குருசு ராயப்பு இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொழும்புத்துறை இராஜநாயகம் தயாலஷ்மி தம்பதியின் மகன் ஹரிஹரன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ நாவற்குழி செல்வராஜா யசோதராராணி தம்பதியின் மகன் மேனகா இன்று தனது ஆறுவது பிறந்தநாளைக்கொண்டாடுகின்றார்.

## சமாதானசபை உறுப்பினர்

(அரியாலை)

அரியாலை கலைமகள் வட்டாரச் சமாதான சபைத் தெரிவுக் கூட்டம் காந்தி சனசமூக நிலைய அரங்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த பல சமூகப் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அரியாலை மேற்குக் கிராம சேவையாளர் திரு. மு. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சீ. வைகுந்தசாமி, உப-தலைவர்: திரு மு. தாமோதரம்பிள்ளை, செயலாளர்: திரு. ஐ. சண்முகலிங்கம், உப-செயலாளர்: திரு எஸ்- யேசுதாசன், எழுவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.


**விழாக் காலச் சலுகை!**

**15-12-85—30-1-86 வரை**

**உங்கள் முதலீடு 3 வருடங்களில்**




விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

**நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!**

**யாழ் - தமிழர் நிதியம்**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22437

(மனோகரா தியேட்டருக்கு அருகாமையில்) (பி 947)



**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



**A/L 88**

அடிப்படை பிரயோககணிதம்

6 மாத கால சனி, ஞாயிறு வகுப்பு

**ஆரம்பம்; 12. 1. 86**

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

**A/L 88**

தூயபிரயோக கணித வகுப்பு

யூலை மாதம் ஆரம்பமாகும்

10-00 : பிரயோககணிதம்

11-30 : தூயகணிதம்

R/15276

இக்கட்டான வேளையிலும்

# சமூக முன்னேற்றக் கழக சமாஜம் புரியும் பணிபெரிது

(குருநகர்)

"ஐந்து வருடங்களுக்கு முன்பாக மாவிட்டபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜமானது எதிர்பாராத அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. துரதிர்ஷ்ட வசமாக நாட்டில் ஏற்பட்ட கஷ்ட நிலைக்குள்ளும் சமாஜம் முன்னேற்றப்பாதையில் வீறுநடை போட்டுவருவது மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. சமாஜத்தின் பொதுச்சொத்தாக இருக்கின்ற ஒரு இலட்சத்து முப்பத்துரெண்டாயிரம் ரூபாவையும் பயனுள்ளவழியில் முதலீடு செய்து அதனுல் பெறக்கூடிய நிதியில் இருந்து சமாஜத்தின் முக்கிய குறிக்கோளான கல்வியை வளர்க்கும் நோக்கில் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்."

மேற்கண்டவாறு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜ வருடாந்த மகாசபைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து மேற்படி சமாஜத் தலைவர்திரு. இ.மு. நாகலிங்கம் பேசுகையில் தெரிவித்தார். இக் கூட்டம் சமீபத்தில் கன்னுதிட்டி, மேபெயர் மண்டபத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பேசுகையில், "கடந்த ஆண்டில் மட்டும் ஆரம்பக்கல்வி பெற வசதியற்ற நாற்பத்தெட்டுப் பிள்ளைகளுக்கும், பல்கலைக் கழக உயர்கல்வி பெறும் ஆறு பிள்ளைகளுக்கும், தொழிற்கல்வி பெறும் ஏழு பிள்ளைகளுக்கும் மற்றும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற போதனைகளைப் பெறும் ஐந்து பிள்ளைகளுக்குமாக சுமார் இருபதாயிரம் ரூபாவைச் சமாஜம் செலவு செய்துள்ளது. இது போன்ற சேவைகளுக்காக இந்தநிதி ஆண்டிலும் இருபத்தையாயிரம் ரூபாவைச் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அகதிகளாக இங்கு வந்துள்ள தமிழர்களின் புனர் வாழ்வுக்காக இரண்டாயிரம் ரூபாவையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்ருர்.

அடுத்து நடைபெற்ற நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவில் கீழ்க்கண்டோர் தெரிவாகினர். தலைவர்: திரு. இ. மு. நாகலிங்கம், பிரதித்தலைவர்: திரு. நா. தங்கவடிவேல் உப தலைவர்கள்: திரு.எஸ். வி. தம்பையா, திரு. யோ. டொமினிக்ஜீவா, திரு. எஸ். ஆனந்தன், திரு, சு. சுந்தரம், திரு. சோ. முருகேசு, பொதுச் செயலாளர்: திரு. க. மாயாதிரவியம், பிரதிப் பொதுச் செயலாளர்: திரு. ச. சின்னையா, உபசெயலாளர்: திரு. மா. கிருஷ்ணராஜா, பொருளாளர். திரு. க. நவரத்தினம், பிரதிப்பொருளாளர்: திரு: சீ. செல்வம், பிரதம அமைப்பாளர்: திரு. எஸ். கே. தம்பிராசா, கல்வி நிதிப்பணிப்பாளர்: திரு. எஸ். கே மணியம், கல்விப்பணிப்பாளர்: திரு. மு. செல்லத்தம்பி.

## அரியாலை இணைப்பாளர்கள்

(அரியாலை)

அகதிகள் புனர்வாழ்வுக் கழக அரியாலை இணைப்பாளர்களாத் திரு. என்.செல்வரத்தினம், திரு. இ. அரசகேசரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் நடைபெற்ற புனர் வாழ்வு பற்றிய கருத்தரங்கில் இத் தெரிவு நடைபெற்றது.

## சுதேசிய விழா ஏற்பாடு

(அரியாலை)

67 வது சுதேசியத் திருநாட் கொண்டாட்ட விழாவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு அரியாலை சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படுவர்.

அஞ்சலி நிகழ்ச்சி உரை

# எப்படியும் வாழலாமென எண்ணி வாழக்கூடாது!

(நீர்வேலி)

"மனிதன் நல்லவன் என்ற பெயரைப் பெற்ருல் மட்டும் போதாது. வாழ்நாள் பூராகவும்மட்டுமல்ல இறந்த பின்பும் நல்லவன் என்ற புகழ் நிலைக்கும் வகையில் வாழுதலே மானிடப் பிறவியின் பேரின்ப வாழ்வாகும். எப்படியும் வாழலாம் என சிலரும் இப்படித்தான் வாழ வேண்டும் எனப் பலரும் நினைக்கும் நிலைதுறந்து உயர் பிறவியாகிய மானிடப் பிறவிப் பேற்றைப்பெற்ற நாம் பேரின்பம் பெற்று வாழ வேண்டும் என எண்ணுதல் வேண்டும்."

இவ்வாறு மறைந்த ஈ. கே. சண்முகநாதன் அவர்களின் முப்பதாம் நாள் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழக உப தலைவர். பெ. தம்பையா குறிப்பிட்டார்.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் அஞ்சலிக் கூட்டம் நீர்வேலி பாலர் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றையதினம் காலை ஆத்ம சாந்திபிரார்த்தனை வடபிராந்திய போக்கு வரத்துச் சபைத் தலைவர் க. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. சண்முகநாதனின் உருவப்படத்தை பிரம்மஸ்ரீ. சு. இராஜேந்திரக் குருக்கள் திரை நீக்கம் செய்து வைத்தார்.

ந. பஞ்சாட்சரம், த வேலுப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்.

# 'எந்தச் சமுதாயமும் கல்வி மூலமே வளர்ச்சி பெறலாம்'

(நல்லூர்)

கொற்றுவத்தை கலைவாணி சன சமூக நிலையத்தின் ஆதரவில் இரண்டாம் வகுப்புத் தொடக்கம் 10ம் வகுப்புவரையிலான இலவசக் கல்விப் போதனை வகுப்புகளை நிலையத் தலைவர் திரு சி பூபாலன் ஆரம்பித்து வைத்தார்.

நிலையத் தலைவர் தனது தலைமையுரையில், "கடந்த மூன்று வருடங்களாக எமது சன சமூக நிலையத்தினுல் எந்த விதமான கட்டணமுமின்றி நடாத்தி வரும் இந்த இலவச வகுப்புகளில் எமது பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர் சேர்ந்து படித்து வருவது மகிழ்ச்சிக்குரியது, எந்தச் சமுதாயமும் கல்வியின் மூலம்தான் முன்னேற்றம் பெறமுடியும்.

இவ்வகுப்புகளில் எதுவித சம்பளமுமின்றி கற்பித்துக் கொடுக்கும் ஆசிரிய நண்பர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம் இந்தச் சந்தர்ப்பத்தை இப்பகுதியில் வாழும் மாணவ, மாணவிகள் நன்கு பயன் படுத்தி முன்னேற்றமடையவேண்டும் என்ருர். கலைவாணி சன சமூக நிலையத்தினுல் நடாத்தப்படும் பாலர் பாடசாலை எதிர்வரும் 6ந் திகதி ஆரம்பமாகவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். பொதுச் செயலாளர் திரு.எஸ் மணிநாதன் நன்றியுரைநிகழ்த்தினுர்.

# நெடுந்தீவு படகுச் சேவை: சீர்குலைவால் மக்கள் அவதி

(வேலணை)

நெடுந்தீவு போக்குவரத்துப் படகுச் சேவை சீர்குலைந்து வருவதால் இப்பகுதி மக்களும், இங்கு கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருவதாக உயர்மட்டத்தில் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இப்பெருந்தீவிலிருந்து தினமும் கடல் பிரயாணத்தை மேற்கொண்டு வரும் மக்கள் பல விதத்தில் பீதியுடன் பிரயாணம் செய்யும் நிலை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இரண்டு அரச படகுகள் மூன்று சேவையில் ஈடுபட்டுவந்தன. இதன்பின் சிலகாலம் காலை, மாலை, இரு சேவைகள் நடைபெற்று வந்தன. தற்போது ஒரு சேவை மட்டுமே பெரும்பாலும் நடைபெறுகின்றது.

'மணிமேகலை' என்ற படகு மட்டுமே தற்போது இந்த ஒரு நேர சேவையில் ஈடுபட்டு வருவதாகவும், இப்படகு உக்கிய நிலையை அடைந்து கொண்டிருப்பதாகவும், இதனுல் பீதியுடனேயே மக்கள் பிரயாணத்தை மேற்கொண்டு வருவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்படகுச் சேவை குறைந்துள்ளதால் நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வருபவர்கள் திரும்பிச் செல்லமுடியாத நிலையும், யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவு செல்பவர்கள் அங்கு தங்கி மறுநாளேதிரும்பி வரும் நிலையும் ஏற்படுகின்றது.

## பரிசோதகர் பயிற்சி

(சரசாலை)

கொடிகாமம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி சங்க முன்னுள் பொதுமுகாமையாளர் சி. சபாரத்தினம் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஒன்றின் முகாமையாளர் திருமதி. ந. கனகம்மா ஆகிய இருவரும் கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்குத்தெரிவாகி கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது பயிற்சி பெறுகின்றனர்.

## நெற்காணி இடாப்பு திருத்தம்

பூநகரி கமநலச் சேவையின் எல்லைக்குட்பட்ட நெற்காணிகளின் விபரங்கள் கமநலச் சேவை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக ஜனவரி மாதம் இறுதிவரை வைக்கப் பட்டிருக்கும். புதிய காணிகளைப் பதிய விரும்புவோரும் திருத்தம் செய்ய விரும்புவோரும் தகுந்த ஆதாரத்தோடு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களோடு தொடர்பு கொள்ளுமாறு பகிரங்க அறிவித்தல்கள் மூலம் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாராட்டு வைபவம்

(அரியாலை)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய 1985 க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தி எய்திய மாணவ மாணவிகளுக்கான பாராட்டு விழா செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

# அன்பு அமைதி சமாதானம்: இறைபணி மூலம் கிடைக்கும்

(நெடுந்தீவு)

"எல்லாப் பணிகளுள்ளும் இறை பணியே மகத்தானதாகும். அன்பு, அமைதி, சமாதானம் என்பன இறை பணியின் மூலம் நம்மை வந்தடைகின்றன. இறைபணியை மகத்துவப்படுத்தும் உயர்ந்த குருவாக அருட்திரு. டீ. ஆர். அம்பலவாணர் அவர்கள் திகழ்ந்துள்ளார். நெடுந்தீவுத் திருச்சபையிற் பணியாற்றிய காலத்தில் குருத்துவ அபிஷேகம் பெற்ற இவர், யாழ், ஆதீனத் திருச்சபைகள் பலவற்றில் தனது சிறந்த சேவையை வழங்கியுள்ளார். அமைதியற்றுச் சமாதானத்தை வேண்டுகின்ற இந்த நாட்களில் அவரது பணி நம்மத்தியிற் தொடர வேண்டும் என்பதே எமது விருப்பாகும்."

இவ்வாறு மானிப்பாய் திருச்சபையினர் ஒழுங்கு செய்த அருட்திரு டீ. ஆர். அம்பலவாணர் அவர்களின் 35 வருட இறைபணியைக் கௌரவித்து நடாத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய திரு. கே. திசைராசா,(ஆசிரியர்)தெரிவித்தார்

அருட்திரு. டீ ஆர் அம்பலவாணர் அவர்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனையை அருட்திரு. சாம் அவர்கள் நடாத்தி வைத்தார்.

திரு. எஸ். ஜெபநேசன் ஆசிரியர், திரு. ஏ. இராசநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினுர்கள். பேராயர் அருட்திரு. டீ. ஜே. அம்பலவாணர் அவர்களும் கலந்து கொண்டார்.

வெளிவந்துவிட்டது!
தோட்டப்பாடசாலை ஆசிரியர் பரீட்சைக்கான
மாதிரி விஞக்களும் விடைகளும்
விலை ரூபா 25/-
வெளியீடு:
இலங்கை ஆசிரியர் காங்கிரஸ்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
R/15279

லயன்ஸ் கழகம், மாவிட்டபுரம்
புதிய தையல் வகுப்புகள்
மாவை லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தின் புதிய வகுப்புகள் 1986, பெப்ரவரி 1ம் திகதி தொடங்க இருக்கின்றன. இதில் சேர்ந்து பயிற்சிபெற விரும்பும் மாணவிகள் தமது விண்ணப்பங்களை 1986, ஜனவரி 25ம் திகதிக்குப் பிந்தாமல் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ,
லயன்ஸ் தையல் நிலையம்
காங்கேசன்துறை வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
என்ற முகவரியில் சேர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.
R 15280

31-ம் நாள் நினைவஞ்சலி

பொன்னையா பாலசுப்பிரமணியம்

(காலஞ்சென்ற இரட்ணகோபாலின் தம்பி)



மலர்வு:
02-05-1930

உதிர்வு:
09-12-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உங்கள்நினைவு எம்மைவிட்டு என்றும் நீங்காது. உங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்ருர்,
உறவினர்கள்.

48/4 ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
R/15276

உதய சிந்தனை

பேசிக்கொண்டேயிருந்தால் பிரச்சினைகள் தீர்க்கப்படமாட்டா. நடவடிக்கையில் இறங்குவதே பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரேவழி.
—நெப்போலியன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

8-1-86 புதன்கிழமை ( குரோதன ) மார்கழி-24

# தொண்டமானுக்கு மூன்று பிரச்சினைகள்

தற்போது இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் தொண்டமான் நேற்று முன்தினம் அங்கு தெரிவித்த சில கருத்துக்கள், இலங்கை அரசின் போக்கை தெளிவாகப் புலனாக்கியுள்ளது.

"இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமாட்டோம்; அரசியல் தீர்வே காண விரும்புகின்றோம்" என்று ஜனாதிபதி கூறி வந்தாலும், அரசாங்கம் என்ன யோசனையுடன் இருக்கின்றதென்பதை தொண்டமானின் அறிக்கை விளக்கமாக்கியுள்ளது.

"பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரியவில்லை" என்று அமைச்சர் தெரிவித்தமையையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம்.

"ஜனாதிபதிக்குச் சகல அதிகாரங்களும் உண்டு. அவர் விரும்பினால் எந்த நேரமும் தேர்தல் நடத்த முடியும்" என்று கூறியுள்ள அமைச்சர், இனப்பிரச்சினை விடயத்தில் நல்லதொரு தீர்வு காண்பதற்கு அவர் விரும்பவில்லை என்பதை தனது அறிக்கையில் மறைமுகமாகச் சொல்லியுள்ளார்.

இரு பகுதியினரும், அதாவது அரசாங்கமும் தமிழீழப் போராளிகளும் தமது "நிலையிலிருந்து" இறங்கக் கூடியதாக இல்லையெனவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லையென்றும் அவர் மேலும் சொல்லியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்றை முற்று முழுதாக ஏற்கும் நிலையில் நாம் இல்லை. தமிழர் தலைவர்களும் தமிழீழப் போராளிகளும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் விட்டுக் கொடுத்து, படியிறங்கி வந்துள்ள போதிலும், அரசாங்கம் தனது 'திமிர்' நிலையிலிருந்து விடுபட மறுத்து வருகின்றது என்பதே சரியாகும்.

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து, தமிழீழ மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் கூட்டணியினர், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு, அரசின் மாற்றுத்திட்டத்தை எதிர்பார்த்து ஏமாற்றப்பட வில்லையா?

"தமிழீழமே எங்கள் தாகம்" என்று போராடிவரும் தமிழீழப் போராளிகள் இலங்கை அரசுடன் திம்பு, டில்லிப் பேச்சுக்களில் ஈடுபட்டு, அரசாங்கத்தின் குறைந்த பட்சக் கோரிக்கையை எதிர்பார்த்து, ஏமாற்றப்படவில்லையா?

சர்வகட்சி மாநாட்டில் தெரிவித்த மாகாண யோசனையையே, திம்பு மாநாட்டிலும் முன்வைத்த அரசாங்கம், அதனையே தனது ஆகக்கூடிய "பரிசு" என்று கூறி அனைவரையுமே ஏமாற்ற எத்தனிக்க வில்லையா?

இத்தனைக்கும் பின்னரும், தமிழர் விடுதலைக் கூட்டணி மாற்று யோசனைத் திட்டத்தைக் கையளித்ததைத் தெரிந்திருந்தும், அமைச்சர் தொண்டமான் தமிழர் பகுதியும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்கள் வழங்கிய தனி நாட்டுக் கொள்கைக்குப் பதிலாக, அதிலிருந்து கொஞ்சம் கீழே இறங்கி, வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மொழி மாநில அமைப்பை கூட்டணி கேட்பதற்கு, அரசாங்கம் என்ன சொல்கிறது?

அரசாங்கம் தனது மாகாணசபை முடிவிலிருந்து இம்மியளவுகூட மாறுபட தயாராக விரும்பாதிருக்கின்றதே!

தமிழர் தலைவர்களும், தமிழீழப் போராளிகளும் சுமுகமான அரசியல் தீர்வுகாண எத்தனையோ விடயங்களில் விட்டுக் கொடுத்த போதிலும், அரசுதான் சர்வாதிகார விடாப்பிடியில் நிற்கின்றது.

தொண்டமானுக்கு இன்றுள்ள பிரச்சினைகள் இரண்டு. இனப் பிரச்சினைத் தீர்வு ஒன்று; மலையக நாடற்றவர் பிரச்சினை மற்றொன்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் இலங்கை திரும்பிய பின்னரே இந்திய வம்சா வழியினரை பாரதம் ஏற்குமென்று பிரதமர் ராஜீவ் தெரிவித்துவிட்ட படியால் இப்போது அவரது பிரச்சினை மூன்றாகி விட்டது.

பொங்கலுடன் ஆரம்பமாகும் பிரார்த்தனை இயக்கமும், அரசாங்கம் இதற்கு விதித்துவரும் கெடுபிடி நிபந்தனைகளும் அவரது பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கச் செய்து வருகின்றன.

பிரதமர் ராஜீவுடனான அமைச்சரின் இவ்வாரச் சந்திப்பு, அவரது பல பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்குமா?

---

தமிழ் தேசியவாதமும் சமுதாயக் கொந்தளிப்பும் 6

# அரச படைகளிடமிருந்து தமிழ்மக்களை விடுவிப்பதே போராளிகளின் புனித பணி

போதனைச் சிரேட்ட கல்விமான்கள் பல்கலைக்கழக முன் மாணவர்க்குரிய மனக்குறைகளை எடுத்து விளக்கிய போதெல்லாம் அம்மாணவ சமுதாயம் இடையறாது அவ்விளக்கங்களுள் கொண்டுவரப் பட்டது. ஆனால் அந்த மாணவர்கள் தரித்து நின்று போராடினர். இதனை நாம் கருத்தில் இருத்திக்கொள்ளல்வேண்டும்.

முதலில் அவர்களின் வெஞ்சினம் அரசியல் ஆதரவின் 'கறுப்புச் சந்தைக்காரர்' அனைவர் மீதும் பதிந்தது. (பத்திரிகை எதனையும் வாசித்து இதனைக் கண்டுகொள்ளலாம்.) ஏற்கெனவே இராணுவம் அங்கு வந்துவிட்டது. அரசியலும் இராணுவமயமாக்கப் பட்டு இருந்தது. இப்போராளிகளின் வருகையோடு நடவடிக்கைகளின் கதி துரிதம் அடைந்தது.

ஆகையால், தமிழரின் போராட்டத்திற் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் இராணுவரீதியாக மட்டும் அல்லாது, இராணுவ முஸ்தீபு வகையிலும் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தமை தவிர்க்க ஒண்ணாதது ஆயிற்று.

பல்கலைக்கழகக் கல்விக்கு முன்படிப்பிற்குரிய மாணவரே குறிப்பாக ஈண்டு மாணவ சமுதாயம் எனப்பட்டனர். தமிழர் தேசியம் அவர்களது உன்னத குறிக்கோள் ஆயிற்று; போர் முறை அதனை எய்தும் மார்க்கம் ஆயிற்று. அதன் பொருள் என்ன? இரகசிய இயக்கங்களாக அவர்கள் செயலில் இறங்கவேண்டியோர் ஆயினர்.

இம்மாணவ சமுதாயத்தினது அரசியல் நடவடிக்கைகளில் இத்தகைய மட்டுப்பாடுகளின் முன்னிலையில் இயக்கங்கள் பல்கிப் பெருகியமை போற்றுதற்கு உகந்தது ஆகியது நடந்தது இதுதான்.

அவர்களது பிரதான அரசியற் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாகும்.

இப் போராளி இயக்கங்கள் எல்லாம் சிங்கள அரச படைகளினால் புரியப்படும் அடக்குமுறைபற்றி முதலிடத்தில் வைத்துப் பேசுகின்றன. தவிரவும், இவ்வரச படைகளிடத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பது தமது வாழ்க்கையின் புனிதப் பணி எனவும் அவர்கள் வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றிக் கூறி வருகின்றனர்.

இங்கு, இலங்கையிலுள்ள இப் போராளி இயக்கங்களை, தென் இந்திய தமிழர் தேசியத்துடன் ஒப்புநோக்கிப் பாருங்கள். அங்கு திராவிட இயக்கத்தினிடம் காணப்பெறும் தமிழர் தேசியத்தின் நிலைப்பாடுகள் சிலவற்றை, இன்று வரை இங்கு இப்போராளி இயக்கங்கள் மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகக் காணப்படும்.

இலங்கையிலுள்ள தமிழர் போராளி இயக்கங்களின் முதன் முதலான அம்சமெனில், திராவிட, தமிழர் போர் நாட்டம் அல்லது வீராப்புப் பேசுவது எதுவும் இதிற் கிடையாது. இந்தியாவில் உயிருள்ள மொழியாக சமஸ்கிருதம் நிலவிய காலத்துக்கு முந்திய மாபெரும் வரலாறொன்று உண்டு. அச்சரித்திர காலத்துடன் தொடர்புடைய போர் ஆர்வமே இங்கு குறிப்பிடப்பட்டது. சங்க காலத்து நாகரிகத்தில் உற்பவித்த அரசியல் மயம் ஆக்கப்பெற்ற இலக்கியப் படைப்புகள் தொடர்புறுத்தப்படுவதே கிடையாது.

நான்முகன் படைப்பில் இறைவனின் செல்லப்பிள்ளைகளாக விளங்குபவர்கள் தமிழர்கள். சைவ சித்தாந்தம் மகத்துவமானது. இக்கருத்துக்கள் மிக அண்மைக் காலத்தவை.

தாய்நாடு விட்டகன்ற சக்திகளினால் இவ்விடயவாதத்தினுட் சேர்த்துக்கொள்ளப்பட்டவை. (ராதிகா குமாரசாமி எழுதிய தமிழர் தேசியத்தின் தெய்வாதீதத் தத்துவம் அகற்றல் மீதான கட்டுரையுடன் ஒப்புநோக்குக) இத்தகைய ஒரு நிலைப்பாடு, தமிழர் விடுதலைப் போராளிகளின் எந்த ஒரு பாரிய இயக்கத்தினாலாவது இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

உள்ளபடியாக, நுண்ணிய பகுப்பாய்வு ஒன்றனை மேற்கொண்டால், திராவிடர் வழி வந்தமை, சைவ சித்தாந்தம் என்பவைபற்றிய மனக் கிலேசமானது, பாரம்பரிய யாழ்ப்பாணச் சைவத் தமிழர் பின்னணியினின்றும் வந்தோரிடமே எழுவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இத்தமிழர் தேசியம் நிறுவும் போராட்டத்திற்கு உயிரூட்டுதற்காக வரலாற்று ஏடுகளில் இடம்பெறும் கடந்த காலத்தை அவர்கள் கையாளவில்லை என்பது உண்மைதான். அதே வேளை, திராவிட உன்னத குறிக்கோளாளரினது நியாயப்படுத்துதலையும் தமக்கேயுரிய தனிவேறுந் தன்மையையும் இன்னமும் வலியுறுத்தவில்லை என்பதும் மெய்யே. உள்ளபடியாக, அவர்களுக்கு அவையிரண்டும் அவர்களது பிராமண எதிர்ப்பு நிலைப்பாட்டின் ஒரு அங்கமாக உள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு வினாவை எழுப்புவது சாலப் பொருத்தம் உடையது இத்தமிழர் தேசியம் பிற்போக்கானதாகக் கூடுமா? இதனையிட்டு ஓரளவு விழிப்பு உணர்வு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

இப்போராளி விடுதலை இயக்கங்கள் மார்க்ஸிஸத்தை வந்தடைந்த மாதிரியில் ஒரே வித, ஒத்த, உருவமைப்பு உள்ளமையை இதே இயக்கங்களினது வரலாறு காட்டுகிறது.

இவ்வீதியில் ஆரம்பத்தில் அவை அரசின் அடக்கு முறை பற்றியே குறிப்பிட்டன. மொழி உரிமைகள் பற்றிய மார்க்ஸிஸக் கட்சிகளின் நிலைப்பாட்டை அக்கட்சிகள் மீள் நோக்கிற்கு உட்படுத்தி இருந்தமை காரணமாக, இயக்கங்கள் அவற்றுக்கு அண்மித்த ஒரு நிலைப்பாடு மேற்கொள்ள விரும்பவில்லை. போராட்டத்தை எப்படி நடாத்துவது என்ற வினாகுறித்து மார்க்ஸிஸவாதிகள் அல்லாதோர், மார்க்ஸிஸ - எதிர்ப்பாளர்கள், ஆகிய கட்சிகளின் நிலைப்பாடுகள் இயக்கங்கள் மத்தியில் ஏமாற்றத்தை உண்டு பண்ணின. ஆகவே, தேசியவிடுதலைக் கருத்தேற்பு வாயிலாக இவ்வியக்கங்கள் மார்க்ஸிஸத்தை நண்ணின. காலஞ் செல்லச் செல்ல, தீர்க்கமான மார்க்ஸிஸ உன்னத குறிக்கோள் தத்துவமயமான இயக்கங்கள் தலைதூக்க ஆரம்பித்தன.

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

**ஹன்டி பேரின்பநாயகம் நினைவுப் பேருரையின் இறுதிப் பகுதி இன்று வெளியாகின்றது. பேராசிரியரின் ஆங்கிலப் பேச்சின் மொழிபெயர்ப்பு இது. இதன் முதல் ஐந்துபகுதிகளும் இம்மாதம் 2ம், 3ம், 4ம், 6ம், 7ம் திகதி 'ஈழமுரசு' இதழ்களில் வெளியானது.**

---

## செல். ஜோன்ஸ் நியமனங்கள்

(நல்லூர்)

யாழ். பரியோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் தலைமையாசிரியராகப் பணி புரிந்த திரு. வி. துரைச்சாமி சேவையிலிருந்து இளைப்பாறியமையால், மத்திய பிரிவின் பொறுப்பாளராகப் பணி புரிந்த திரு. எஸ்.பி. ஜீவானந்தம் ஆரம்ப பாடசாலையின் தலைமையாசிரியராக நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

கல்லூரியின் ஆசிரியரும், விளையாட்டுக் குழுவின் செயலாளராகவும் பணி புரிந்த திரு. என். எஸ். தனபாலன் மத்திய பிரிவின் பொறுப்பாளராக நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

---

**வெள்ளிக்கிழமை**

## ஸ்ரீ ஆஞ்சனேயர் உற்சவம்

வல்லை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமி ஜயந்தி உற்சவம் இம்மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பகல் ஒன்பது மணிக்கு விசேட அபிஷேகமும் ஆராதனையும், பிற்பகல் 5 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், உற்சவமும் இடம் பெறும்.

### அமெரிக்க அதிபர் றீகன் தீர்மானம்:

# லிபியாவுக்கு எதிராகப் புதிய பொருளாதாரத் தடைகள்!

(வாஷிங்டன்)

லிபியாவுக்கு எதிராகப் புதிய பொருளாதாரத் தடைகளை மேற்கொள்வதென்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் தீர்மானித்துள்ளார்; அதேவேளை அதன்பின் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் உரிமையும் தமக்கு உண்டென்று அவர் கூறியுள்ளார்.

லிபியாவுக்குத் தாம் பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நேற்றிரவு நடைபெறவிருந்த செய்தியாளர் மாநாட்டில் திரு. றீகன் அறிவிப்பாரென்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்

டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ரோமிலும், வியன்னாமிலும் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அபுநிதால் கெரில்லாக் குழுவுக்குப் புகலிடம் அளித்துள்ளதாக அமெரிக்கா லிபியா மீது குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்கிடையில் திரிபொலியிலுள்ள மேற்கு நாடுகளின் தூதுவர்களுக்கு லிபியாவின் நிலை குறித்து விளக்கிக் கூறுவதற்காக லிபிய வெளிநாட்டமைச்சு அவர்களை அழைத்திருந்தது.

தான் இத்தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என லிபிய அரசாங்கம் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

### பிரதம மந்திரி வேண்டுகோள்:

# வெளிநாட்டிலுள்ள பாரத விஞ்ஞானிகள் தாய்நாடு திரும்பி சாதனை படைக்கவேண்டும்

(சென்னை)

''வெளிநாடுகளில் உள்ள பாரத விஞ்ஞானிகள் தாயகம் திரும்ப வேண்டும்'' என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். வட ஆர்க்காடு மாவட்டத்தில் காவலூரில் ஜவ்வாது மலையில் அமைந்துள்ள ஆசியாவிலேயே மிகப்பிரமாண்டமானதான தொலை நோக்கிச் சாதனத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

ஆறரைக் கோடி ரூபா செலவில் பதின்மூன்று வருடகாலப் பணியில் இந்நிலையம் உருவாகியுள்ளது.

இந்த டெலஸ்கோப் முற்றிலும் உள்ளூர் தயாரிப்புகளைக்



கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

'பாரதம் விஞ்ஞானத்துறையில் மேலும் சாதனைபடைக்க பாரத விஞ்ஞானிகள் தம்பணியைத் தாய்நாட்டிற்கு அர்ப்பணிக்க வேண்டும்'' என்று பிரதம மந்திரி இந்நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வானியல் தொழில் நுட்பத்துறையின் தந்தையெனப் போற்றப்படும் வைனுபப்புவின் பெயரை இந்நிலையத்திற்குப் பிரதம மந்திரி சூட்டினார்.

### பாரத - இலங்கை தொழிலதுறை

# கூட்டு முயற்சி; தமிழகத்தில் பேச்சுவார்த்தை நிகழ்வு

(சென்னை)

இலங்கைக் கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தமிழகத்தில் பாரத-இலங்கை தொழில்துறைக் கூட்டுமுயற்சி தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்

பரஸ்பர மேம்பாட்டு நிலைக்கு இக்கூட்டு முயற்சி அவசியமென அவர் வற்புறுத்தினர்.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைக் குழுவுக்கு திரு. தொண்டமான் தலைமைதாங்கி வந்துள்ளதாக சென்னை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன,

## 30 தமிழர் கொலை

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரால் முப்பது தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று கொழும்புக்குக் கிடைத்த ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிப்பதாக நேற்றுக் காலை சென்னை வட்டாரங்கள் தகவல் தந்தன.

எழுபதுபேருக்குமேல் காயப்பட்டதாகவும் இத் தகவல் மேலும் தெரிவித்தது.

## லெபனன் கோரிக்கை

(பெய்றூட்)

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு தொடர்பாக விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்துச்சபையை உடன் கூட்டுமாறு லெபனன் கேட்டுக்கொண்டுள்ளது.

## லைபீரியாவின் புதிய அதிபர்

(லண்டன்)

லைபீரியாவின் அதிபராக திரு. டோ பதவியேற்றுக் கொண்டுள்ளார். இப் பதவியில் அவர் ஆறு வருடங்கள் நிலைத்திருப்பார்.

## 6 வருட கால பதவியேற்றார்

கடந்த அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற தேசிய தேர்தலுக்கும், திடீர் இராணுவப் புரட்சிக்கும் பின் அவர் இப் பதவியினை ஏற்றுள்ளார்.

# சீர்குலைவு, பிளவு சக்திகள்: அகாலிதள் கண்டனம்

(ஜலந்தர்)

''சீர்குலைவு, பிளவு சக்திகள் குறித்து அகாலிதள்ளின் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்டத் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மனிதகுலத்திற்கு முக்கியமாக சீக்கியநெறிக்கு மாறானது என்றும்மாநாடு ஒன்றில் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் பத்தாம் திகதி சீக்கியர் சம்மேளனம் நடத்தத் தீர்மானித்துள்ள சாலைப் போக்குவரத்துத் தடை எதிர்ப்பு நடவடிக்கை குறித்தும் கண்டனம்தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

## பரீட்சை

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் 7ம் ஆண்டுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 6ம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

## பஞ்சாப்பில் மீண்டும் வன்முறை

(ஜலந்தர்)

பஞ்சாப்பில் ஏற்பட்ட நான்கு வன்செயல்களில் எழுவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் நால்வர் காயமடைந்துள்ளதாகவும் நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

# 1985 திரும்பிப் பார்க்கிறோம்

(நேற்றைய தொடர்ச்சி)

18. வவுனியாவில் மில் முதலாளி சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து ஹர்த்தால். 19 திருமலை இந்து மயானத்தில் டைனமைட் வீச்சு, ஒருவர் பலி, பலர் காயம் 20. 600 தமிழ் இளைஞர் பூஸாவில் உண்ணாவிரதமென அறிவிப்பு. 21. மன்னார் அகதி முகாமுக்குச் சென்ற மருந்து வகைகள் முருங்கனில் படையினரால் பறிமுதல். 22. மட்டுநகரில் ஊர்வலமாகச் சென்ற மாணவர், பெற்றோர் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம். யாழ் நகரில் ராணுவம் திடீர் ரோந்து, குண்டுவெடிப்பு, பரபரப்பு. 23 இராமேஸ்வரம் அருகில் அகதிகளாகச் சென்றவர்களின் சடலங்கள் மீட்பு. 24 யாழ் நகரில் ராணுவ ரோந்து, குண்டுவெடிப்பு வவுனியா அரச அதிபர் வீட்டில் இரண்டாவது தடவை கொள்ளை. 26. மொரவேவாவில் வைத்து நான்கு கொழும்பு வர்த்தகர்கள் சுட்டுக்கொலை. பொலனறுவையில் ஏழு தமிழ்ப்பயணிகள் சுட்டுக்கொலை. 27. யாழ். தபால் நிலையம் முன்பாக இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை. 28. மண்டூர், திருமலையில் மொத்தம் 45 தமிழர் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொலை. 29. முரசுமோட்டை சுற்றிவளைப்பு, பலர் கைது. இரணைமடுவில் வீடு முற்றுகை, நால்வர் பலி 30. இராணுவ தலைமையகத்தில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை. வடபகுதி ரயில்களில் பார்சல் அனுப்பத் தடை.

## டிசம்பர்

1. அக்கரைப்பற்றில் கண்ணிவெடி கொமாண்டோ பொலிஸ் தீவிரவாதிகள் மோதல். மூன்று தீவிரவாதிகள், ஒரு பொலிஸ் பலி, கல்லடியில் பொலிஸ் ஜீப்மீது குண்டு வீச்சு ஒரு பொலிஸ் மரணம், மூவர் காயம், 2, வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழருக்கு விசேட அடையாள அட்டை வழங்க முடிவு, ஈழம் தேசிய முன்னணி தமிழக முதல்வர் சந்திப்பு, கிளிநொச்சியில் இராணுவம் சூடு. 3. திருமலை- தெகிவத்த கண்ணிவெடி, ஐந்து இராணுவம் பலி. 3 பேர் காயம், 5. வவுனியாவில் சில பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை, பலர் கைது, பளையில் கைதான 39 பேர் விடுதலை. 6. சேருவில முகாமில் இருந்து தப்பி ஓடிய பத்து தீவிரவாதிகள் சுட்டுக் கொலை, 7. வடக்கில் க. பொ. த. சாதாரண பரீட்சை ஆரம்பம், கண்காணிப்பு குழு கிளிநொச்சி விஜயம்,
8. பிரதமர் காந்தி ஜே. ஆர். டாக்காவில் பேச்சு, 9. இனப் பிரச்சினை பற்றி வாஷிங்டனில் இருநாள் மாநாடு. 10. கிளிநொச்சியில் ராணுவம் சுட்டு ஒருவர் பலி; கண்ணிவெடிக்கு 10 ராணுவம்காயம்; பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா கொழும்பு வந்தார். 12. பெருமாள் கோவிலடியில் தேடுதல், இராணுவம் சுட்டு நகரில் இருவர்பலி; 13. கண்காணிப்பு குழு திருமலை விஜயம். 14. யாழ்தேவி அனுராதபுரம்வரை மட்டும். 15 கண்காணிப்புக் குழு மூதூர் சென்றது. யாழ் கோட்டை அருகில் குண்டு வெடிப்பு. ஒருவர் பலி. 17. சுழிபுரம், பொன்னாலை பகுதியில் கடற்படை, ராணுவம் தாக்குதல், கடை சேதம் பலருக்கு சூடு; இருவர் பலி. 18. கண்காணிப்புக்குழு யாழ்ப்பாண விஜய அறிக்கையை சமர்ப்பித்தது. 19. சுவிஸ் குழு யாழ்ப்பாணம் வந்தது. ஜனாதிபதி தொண்டமான் சந்திப்பு; 20. யாழ். கொழும்பு இன்ரசிற்றி மீண்டும் ஆரம்பம்: அரியாலை கொழும்புத்துறை 5 ஹெலிகப்டர் மூலம் தேடுதல், சூடு, பெண்கள் காயம், இருவர் பலி. 21. சுதுமலைப் பகுதியில்தீவிரவாதிகள் படையினர் மோதல், ஹெலிகப்டரில் இருந்து சூடு; ஒருவர் பலி; பலர் காயம்; சுவிஸ் குழு வவுனியா விஜயம். 22. கிளிநொச்சி, ஜெயந்திநகர், திருநகர் ராணுவம் ரோந்து, பலர் கைது, சூடு; மட்டுநகர் ஊறணி சுற்றிவளைப்பு, 300பேர் கைது அக்கரைப்பற்று தேடுதல், பலர் கைது. 23. பாலசிங்கத்தின் சென்னை வீட்டில் குண்டு வெடிப்பு; காரைநகரில் கடற்படை சூடு, ஒருவர் பலி. 24. யாழ்தேவி மீண்டும் ஆரம்பம்; தமிழர் பிரச்சினை தீரும் வரை இந்திய வம்சா வழியினரை இந்தியா ஏற்க மாட்டாதென பிரதமர் ராஜீவ் அறிவிப்பு. 25. பரந்தனில் இராணுவம் சுட்டு ஒருவர் பலி, இருவர் காயம், மட்டுநகரில் இராணுவம் சுட்டு இருவர் பலி. 26. மட்டுநகரில் சீருடையினர் சுட்டு 2 பேர் பலி. 28. மட்டுநகர் சம்பவம் பற்றி கண்காணிப்பு குழு அறிக்கை சமர்ப்பித்தது.

## அந்தியேட்டிக் கிரியை, சபிண்டீகரண அழைப்பிதழ்

**இளையதம்பி நடராசா**

தோற்றம்: 29-4-1929 மறைவு: 13-12-85

தாயும் தந்தையுமாய் கண்ணை இமை காப்பது போல் எம்மை பாசம் என்னும் கோட்டையால் காத்த அணையா விளக்காம் நடராசா (இரத்தின மாஸ்ரர்) காலம் சென்ற பொன்னுச்சி ஆசிரியையின் அன்புக் கணவரும் சந்திரா (கரவெட்டி), வதனு, காந்தி, கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய இவர் 13. 12. 85 வெள்ளிக்கிழமை எம்மையெல்லாம் துயரத்தில் விட்டு விண்ணுலகு எய்திவிட்டார்.

அவரது 8. 1. 86ல் கரவெட்டியில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 12. 1. 86 ஞாயிற்றுக் கிழமை வட்டக்கச்சியில் நடைபெறும் சபண்டியிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

735. படித்த வாலிபர் திட்டம்,
சிவிக் சென்ரர்,
வட்டக்கச்சி.

இங்ஙனம்,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்

ஈழமுரசு

## இரு அரிசி லொறிகள் கடத்தல்; 10 பேரைக் காணவில்லை!

(மட்டுநகர்)

கொழும்பிலிருந்து லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான அரிசி மூடைகளுடன் மட்டுநகர் நோக்கி வந்த இரண்டு லொறிகள் நேற்று முன்தினமிரவு மொரக்கொட்டாஞ்சேனைக்கும் வந்தாறுமூலைக்குமிடையே கடத்திச் செல்லப்பட்டன. பின்னர் அரிசி மூடைகள் இல்லாது வெற்று லொறிகளாக இவை மீட்கப்பட்டுள்ளன. ஆனாலும் இரண்டு லொறிகளிலும் பயணம் செய்த சுமார் பத்துப் பேரைப்பற்றிய தகவல்களைப் பெறமுடியவில்லையென்றும், அவர்கள் என்னவானார்கள் என்பது தெரியவில்லையென்றும் கூறப்படுகின்றது.

கதீப்மார் சம்மேளனத் தலைவர் பேச்சு:

# சிறுபான்மைச் சமூகங்களின்மீது அரசாங்கம் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முற்படக்கூடாது

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலமே சகல சமூகத்தினரும் நிம்மதியாக வாழும் நிலை உருவாகும். இந்த நாட்டில் வாழும் சமூகங்களின் உரிமைகள் சமத்துவமாக வழங்கப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டியது அரசின் பொறுப்பு. இதைவிடுத்து தமது ஆதிக்கத்தை சிறுபான்மைச் சமூகங்கள் மீது செலுத்தி அடக்க அரசு முற்படக்கூடாது. அவ்வாறான நிலை தொடர்ந்து இங்கு நீடிக்குமாயின் ஒவ்வொரு பிரஜையினதும் உயிருக்கும் உத்தரவாதமில்லாததாகிவிடும்.

இவ்வாறு யாழ். பஸ் நிலையத்தில் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் பலியான, ஜனாப செய்னம்பு முஹிய்யதீன் பிச்சை(65) அவர்களின் ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றியபின் உரையாற்றிய அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவரும், யாழ். மாவட்ட உலமா சபையின் தலைவருமான அல்ஹாஜ் மௌலவி கே. எம். எச். காலிதீன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவதை அல்லா ஏற்றுக்கொள்ளமாட்டான். இவ்வாறான நிலை நீடிக்குமாயின் அது பெரும் அழிவிற்கே வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டார்.

துவாப் பிரார்த்தனையை விரிவுரையாளர் மௌலவி எம்.ஐ. அத்துர்ரஸ்ஸாக் நிகழ்த்தினார்.

## திருநகர் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்

(கிளிநொச்சி)

திருநகரில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இவரது சடலம் சீருடையினராலேயே வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டது.

இரண்டு கவச வாகனங்களில் கணேசபுரம் பகுதிக்குச் சென்ற சீருடையினர், தம்மைக் கண்டதும் அச்சத்தினால் ஓடிய டேவிட் என அழைக்கப்படும் சீலன் என்ற இளைஞனையே சுட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள 155-ம் கட்டையில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் சீருடையினரைக் கண்டதும் இரண்டு இளைஞர்கள் தமது மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு ஓடினர். கவச வாகனம் மோட்டார் சைக்கிள் மேலால் ஓட்டிச் செல்லப்பட்டது.

## யாழ். விக்டோரியா வீதியில் மேலதிக மினிபஸ் நிலையம்?

கடந்த சில வாரங்களாக யாழ். நகரில் ஏற்பட்டு வரும் போக்குவரத்து நெரிசல்களையும், விபத்துக்களையும் குறைக்கும் ஒரு முயற்சியாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் மினிபஸ் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இவ் ஆலோசனையின் போது பஸ் நிலையப் பகுதியில் நிறுத்தப்படுகின்ற மேலதிக மினி பஸ்களை மேற்படி பஸ்கள் சேவையில் ஈடுபடும் வரையில் விக்ரோரியா வீதியில் நிறுத்தி வைக்க வேண்டுமென ஆணையாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை தாம் நடத்தும் ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசித்து முடிவு தெரிவிப்பதாக மினிபஸ் உரிமையாளர்கள் தெரிவித்ததாகவும் தெரிய வருகின்றது.

## யாழ்.பிரஜைகள் குழு ஜனாதிபதிக்குக் கடிதம்:

## கண்காணிப்புக் குழுவின் யாழ். விஜயங்கள் இங்குள்ள அமைதி நிலையை கலைக்கின்றன!

"யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளும் ஒவ்வொரு விஜயமுமே அசம்பாவிதமாக அமைகின்றது. குழுவினர் விசாரணை நடத்தவிருந்த ஹோட்டலுக்கு அருகாமையில் கண்ணிவெடி புதைத்து வைக்கப்பட்டதாக பின்னர் கூறப்பட்டது. இது உண்மையாயின், பிரஜைகள் குழுக்களைச் சந்திப்பதற்கான இடத்தை உடனடியாக மாற்றுவதற்கு சிவில் நிர்வாகத்தின் உதவியுடன் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்."

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட கடிதமொன்றை, யாழ். பிரஜைகள் குழுவினர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

"பிரஜைகள் குழுக்களைச் சந்திப்பதற்கு கண்காணிப்புக் குழு படையினரில் தங்கியுள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் நிலவி வந்த அமைதி மீண்டுமொரு முறை கலைக்கப் பட்டுள்ளது" எனவும் இக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நியாயமான காரணமின்றி ஹெலிகப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்துள்ள இக்குழு, கடந்த 4-ம் திகதி குழு முன்னால் சாட்சியமளிக்கத் தயாராகவிருந்த சுதுமலை, சுழிபுரம், அரியாலை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுக்கள் இச்சம்பவத்தால் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சேரி பென்ஷன் சனி, ஞாயிறில்

இலங்கைவங்கி கச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய இம்மாத ஓய்வூதியம 11ம் திகதி சனிக்கிழமையும், 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் ஓய்வூதியம் பெறுபவர்கள் சகலருக்கும் 11ம் திகதியும், விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கலச்சேவிதர்கள். படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஓய்வூதியம் 12ம் திகதியும் வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுகள் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை மட்டுமே வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## லியோ கழக இரத்ததான நிகழ்ச்சி

யாழ். அரசினர் வைத்திய சாலை நிர்வாகத்தின் கோரிக்கையையடுத்து இரத்ததான வழங்கல் நிகழ்ச்சிகளை நடாத்த யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம் முன்வந்துள்ளது. நேற்று இக் கழகம் மேற்படி கல்லூரியில் ஒழுங்கு செய்திருந்த இரத்ததான நிகழ்ச்சியில் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இரத்த தானம் செய்தனர்.

## தமிழாராய்ச்சி மாநாட்டு தியாகிகள் தின அஞ்சலிக்கூட்டம்

தமிழ ஆராய்ச்சி மகாநாட்டில் அகாலமரணமடைந்தவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 45 மணிக்கு நல்லூர் இந்து வீதியில பொதுக்கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இன்றுள்ள நிலையில் யாழ். வீரசிங்கம மண்டபத்திற்கு முன்னாலுள்ள, மரணமானவர்களின் நினைவுச்சின்னத்திற்கு அருகில் அஞ்சலி நிகழ்ச்சியையோ பொதுக்கூட்டத்தையோ நடாத்துவது முடியாத காரியமாகவே இருக்கும்.

### மினி வானக்....

காரைநகர், மாதகல், பண்டத்தரிப்பு, கீரிமலை பகுதி ஊடாக நடைபெறும் பஸ் சேவைகளின் போக்குவரத்துகள் தடைப்பட்டன.

ஞாயிறு இரவு வீட்டில் வந்த சிலர் தமது வானை எடுத்து சில மணி நேரத்தால் திருப்பி தருவதாக கூறி, இதுவரை தரவில்லை என்றும இந்த வான் மூலமே தமது குடும்ப சீவியம் நடைபெறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பலர் இந்த மறியல் போராட்டத்தைக் கைவிட்டு பாதையை விடும்படி கெஞ்சிக் கேட்டும் அவர்கள் தமது மறியலை நடாத்தினார்கள். இதனால் இப் பாதையூடாக செல்லும வாகனங்கள் வேறு வழியாகவே சென்றன.

### தமிழ் படிக்கும்....

சிலர் இங்குள்ள புத்தகசாலையொன்றில தமிழ் பாலர் புத்தகங்களை வாங்கினர். தாங்கள் தமிழ் படிக்கவேண்டும் என்பதற்காகவே வாங்குவதாகவும் புத்தகசாலையினரிடம் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பகுதிக் கிராமங்களுக்கு அடிக்கடி ரோந்து செல்லும் இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக இராணுவ சீருடையில் செல்லாது சாதாரண இளைஞர்களைப் போல சாரம், சேட் அணிந்தே செல்கின்றனர். ட்ராக்டர்களிலும், காரிலும் இவர்கள் வருவதால் பொதுமக்களுக்கு இலகுவில் அடையாளம் காணமுடியாமலுள்ளதாம்.

### வவுனியா....

னியா நகர்வரை வியாபித்து பெருத்த கலக்கத்தை உண்டு பண்ணியது.

இச்சமபவத்தில் சிக்கிய ஜீப் சுக்குநூறாகியதுடன் அதன் இரும்புப் பாகம் ஒன்று ஐம்பதடி உயரம் வரை மேலே பறந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து அப்பகுதி ஓரே புகை மண்டலமாகக் காட்சியளித்ததாகவும், மூன்றடி விட்டமுள்ளதாக குறிப்பிட்ட வீதியில் கிடங்கொன்று காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஜீப்பில் இருந்து 'செலி' உடைந்து சிதறி அருகில் நின்ற பசுமாடு ஒன்றின் மீது பட்டதால் அம்மாடும் துடிதுடித்து மடிந்தது.

சம்பவத்தையடுத்து அவ்விடத்தில் இருந்த தேநீர்க்கடை ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது.

### யாழ். சம்பவம் ...

இவ் ஆச் சம்பவங்கள் தொடர்பான தனியான அறிக்கையை தாம் சமர்ப்பிக்கவிருப்பதாக பேராசிரியர் தெரிவித்தார்.

பேராசிரியர் தமது ராஜினாமாவை ஏற்கனவே சமர்ப்பிக்க திட்டமிட்டிருந்த போதிலும், சில தேவைகளை முன்னிட்டு, சில நாட்களுக்கு அதனை ஒத்திப்போட நேர்ந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

### இந்திராவை ....

டுக் கொலை செய்திருக்கலாம் என்று இந்திரா கொலை தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணையில் எதிரிகள் சார்பில் ஆஜராகியுள்ள பிரதம வழக்கறிஞர் பிரான் மாத்லெக்கி நேற்றுத் தெரிவித்தார். ராஜீவ் காந்தி இதனைச் செய்யும் வல்லமை படைத்தவர் என்றும் திரு. பிரான் மேலும் தெரிவித்தார்.

### யாழ். ரயில்...

வாரன்ட்டுக்கும் மட்டுமே வழங்கப்படும எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைக்குச் செல்பவர்கள் யாழ்தேவியின் மூன்றாம் வகுப்பிற்கு 59 ரூபா 50 சதத்திற்கும் இரண்டாம் வகுப்பிற்கு 61 ரூபா 50 சதத்திற்கும், இன்ரசிற்றிக்கு 150 ரூபாவிற்கும் காசுக் கட்டளை பெறவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்பவர்கள் 18 ரூபா 50 சதத்திற்கான காசுக்கட்டளையைப் பெற்று டிக்கட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

### மலையகத்தில் ...

தால் பதினான்கு பேர் அதற்குள் மரணமாகினர்.

சடலங்களை மீட்கும் வேலைகள் நடைபெறுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளும் வழங்கப்படுகின்றன.

இத்தவேளை அடுத்த சில நாட்கள் நாட்டின் பல பாகங்களிலும், கடும் மழை பெய்யும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது சில இடங்களில் கடுமையான காற்றும் வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னம்பிட்டி ...

காரணமாக மன்னம்பிட்டி பாலத்தில் ஏழு அடி உயரத்திற்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் இப் பாதையூடாக போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

### தொண்டமானும்...

தெரிவித்துள்ள அமைச்சர், இவர்கள் நிலையில் மேலும் தாமதம் ஏற்படுத்தக் கூடாது என்றார்.

### ஜனாதிபதி அறிவிப்பு....

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைவதை எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவே எதிர்க்கிறார் என்றும் அவர் சொன்னார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பொதுத்தேர்தல் நடத்தப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பதிகுயில் 08-01-86 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336